
# பொருளியலின் அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் உற்பத்தி இயலளவு மாற்றம்



The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa


## 1. வள அருமை

வரையறுக்கப்பட்ட வழங்கல் வரையறையற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு போதாமல் இருப்பதனை வள அருமை என்பர். உற்பத்தியில் பொருளாதாரம் பயன்படுத்தும் வளங்கள் அருமையானதாக இருப்பதனால் உற்பத்திக்கு சாத்தியமற்ற பகுதியில் உற்பத்தியை மேற்கொள்ள முடியாமல் இருப்பதற்குரிய காரணம் வள அருமையாகும்.




## 2. வளமாற்றுப் பயன்பாடு


ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பண்ட உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் வளம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் வேறு பண்ட உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதனை வளமாற்று பயன்பாடு எனப்படும்.




அருகிலுள்ள வரைபடத்தின் படி A புள்ளியில் இருந்து B புள்ளிக்கு உற்பத்தி செயற்கையை மாற்றும் போது Y பண்ட உற்பத்தியில்பயன்படுத்தப்படும் ஒரு பகுதி வளம் X பண்ட

## 3. தெரிவு

மாற்று சேர்க்கைகளைக் கொணட் உற்பத்தி சாத்திய வளையியில் யாதாயினும் ஒரு சேர்கையினை சமூ





இவ்வரைபடத்தின் படி A, <, C, D ஆகிய உற்பத்திப் புள்ளிகளில் யாதாயினும் ஒரு புள்ளியை சமூகம் தெரிவுசெய்ய வேண்டும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 4. அமையச் செலவு/சந்தர்ப்ப செலவு


குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கையின் போது அருமையும் மாற்றுப்பயன்பாடுகளுக்கு இடையியே தெரிவுசெய்யும் போது அதற்காக கைவிடப்படுகின்ற அதற்கடுத்த சிறந்த மாற்று சந்தர்ப்பம் அமையச் செலவு எனப்படும்.




அருகிலுள்ள வரைபடத்தின் படி A என்ற புள்ளியிலிருந்து B என்ற புள்ளிக்கு நகரும் போது X பண்ட உற்பத்தி 400 அலகுக-ளால் அதிகரிக்கின்றது. Y பண்ட உற்பத்தி 500 அலகுகளால் குறைந்துள்ளது. எனவே X பண்ட உற்பத்தியை 400 அலகுக-ளினால் அதிகரிப்பதற்குரிய அமையச்செலவு Y பண்டத்தில் இழக்கப்பட்ட 500 அலகுகலாகும்.

## 5. உற்பத்தி வினைத்திறன்

கொடுக்கப்பட்டுள்ள வளங்களை பூரணமாகவும் உச்ச இயலளவிலும் பயன்படுத்தி செலவுகளை இழிவுபடுத்தி பெற்றுக் கொள்ளப்படும் வெளியீட்டு மட்டத்தினை உற்பத்தி வினைத்திறன் எனப்படும். இதற்குரிய




1. நிறைதொழில் மட்டம்
2. பூரண உற்பத்தி

உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள சகல புள்ளிக்கும் உற்பத்தி வினைத்திறனை வெளிப்படுத்தும்.

அருகிலுள்ள வரைபடத்தின் படி A, B, C, D,E ஆகிய புள்ளிகள் யாவும் உற்பத்தி வினைத்தியனை வெளிப்படுத்தும்.

## 6. வள ஒதுக்கீட்டு வினைத்திறன்

பொருளாதாரத்தில் உள்ள அருமையும் மாற்றுப்பயன்பாடுகளைக் கொண்டவளங்களை சமூகத்தெரிவுககு பொருத்தமான வகையில் பிரித்து ஒதுக்கீடு செய்வதனை வளஒதுக்கீட்டு வினைத்திறன் எனப்படும். இதற்குரிய நிபந்தனை வருமாறு,

எல்லை நலனும் எல்லைச்செலவும் சமனாகக் காணப்படும்

**MB = MC**


விலையும் எல்லைச் செலவும் சமனாகக் காணப்படும்

**P = MC**

தொகுப்பு :- திரு அ.பிரபாகரன், ஆசிரியர் - யா/ஹென்றியரசர் கல்லூரி

கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





மேலுள்ள வரைபடத்தின்படி B என்ற புள்ளியில் MB = MC ஆக இருப்பதனால் அப்புள்ளியில் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் காணப்படும்.

**Remarks:**

பொருளாதாரமொன்றின் உற்பத்தி வினைத்திறனும் வளஒதுக்கீட்டு வினைத்திறனும் இனைந்து பொருளாதார வினைத்திறன் ஏற்படும். உற்பத்தி சாத்திய விளை கோட்டின் மீதுள்ள எப்புள்ளியில் எல்லை நலனும் எல்லைச்செலவும் காணப்படும் போது அப்புள்ளியில் பொருளாதார வினைத்திறன் காணப்படும். மேலுள்ள வரைபடத்தில் ‘B’ என்ற புள்ளியில் பொருளாதார வினைத்திறனைக் காணமுடியும்.

## 1. நிறைத் தொழில்மட்டம்

பொருளாதாரமொன்றில் காணப்படும் சகலவளங்களையும் பூரணமாகவும் வினைத்திறனுள்ள வகையில் உற்பத்தி செயற்பாடொன்றில் பயன்படுத்தப்படுதல் நிறைதொழில்மட்டம் எனப்படும். உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மீதுள்ள ஒரு புள்ளி நிறைதொழில் மட்டத்தினை வெளிப்படுத்தும்.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


## 2. குறைதொழில் மட்டம்.:.வேலையின்மை.

பொருளாதார மொன்று வளங்களை உச்ச வினைத்திறனாக பயன்படுத்த முடியாத நிலை குறைதொழில்மட்டம்மாகும். உற்பத்தி சாத்திய வளைகோட்டின் உட்புறத்திலுள்ள புள்ளி




## 3. பொருளாதார பின்னடைவு


பொருளாதாரமொன்றின் மொத்தக் கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சியினால் உற்பத்தி குறுங்காலத்தில் குறைவதனைபொருளாதார பின்னடைவு என்பர். உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மீதுள்ள புள்ளி





## 4. பொருளாதாரமந்தம்

பொருளாதார பின்னடைவின் நீண்டகால நிலைமை பொருளாதார மந்தமாகும். இது ஒரு

பொருளாதாரமந்தத்தில் வேலையின்மையிலுள்ள வளங்கள் அழிவடையும் போது உற்பத்தி




பொருளாதார மந்தத்தில் வேலையின்மையிலுள்ள வழங்கள் அழிவடையாத போது உற்பத்திப்புள்ளி உள்நோக்கி நகரும்.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


## 5. பொருளாதார வளர்ச்சி

பொருளாதாரமொன்றின் மெய்உற்பத்தியானது நீண்ட காலத்தில் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்லுதல் பொருளாதார வளர்சியாகும்.

**பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள் வருமாறு.**

1. வளத்திரட்சி அதிகரித்தல்
   - i. புதிய வளங்கண்டு பிடிப்பு
   - ii. புதிய வளங்களின் உரிமையைப் பெறுதல்
   - iii. வெளிநாடுகளில் இருந்து வளங்கள் உட்பாய்தல்
   - iv. புதிய தொழிநுட்ப முறைகள் மூலம் வளங்களின் அளவை உயர்த்துதல்.
2. வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்
   - i. தொழிநுட்ப முன்னேற்றம்
   - ii. மனிதமூலதன அபிவிருத்தி
   - iii. முகாமைத்துவ மேம்பாடு
   - iv. தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சியை ஊக்குவித்தல்.

உற்பத்தி சாத்திய வளைகோட்டின் வெளிநோக்கிய (வலப்புற) அசைவு பொருளாதார வளர்ச்சியை வெளிப்படுத்தும்






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 5. பொருளாதார வீழ்ச்சி

பொருளாதாரமொன்றின் மெய் உற்பத்தியானது நீண்டகாலத்தில் தொடர்ச்சியாக குறைதல் பொருளாதார வீழ்ச்சி எனப்படும். இதனை ஏற்படுத்தும் காரணிகள் வருமாறு

1. வளத்திரட்சி குறைதல்
   i. இயற்கை அனர்த்தம், யுத்த நடவடிக்கைகளினால் வளங்களின் ஒருபகுதி அழிவடைதல்
   ii. வெளிநாட்டு முதலீடு குறைவடைதல்.
2. வளங்களின் விளைதிறன் குறைதல்
   i. தொழிநுட்பம் பின்னடைதல்
   ii. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுதல்


உற்பத்தி சாத்திய வளைகோட்டின் உள்நோக்கிய (இடப்புற) அசைவு பொரளாதார வீழ்ச்சியை வெளிப்படுத்தும்.




**Reamrks:-**

ஒருநாட்டின் உற்பத்தி இயலளவை பாதிக்கும் காரணிகள் ஒரு பண்ட உற்பத்திக்கு தரப்பட்டால் அப்பண்டத்ததினை காட்டும் அச்சினால் மட்டும் உற்பத்தி சாத்திய வளையி நகரும். பின்வரும் உதாரணம் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.


1. கைத்தொழில் பண்ட உற்பத்தியில் கையாளப்பட்ட தொழிநுட்பம் முன்னேற்றமடைதல்







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


2. விவசாய பண்ட உற்பத்தியில் ஈடுபடும்தொழிலாளர்களின் தேர்ச்சித்திறன் அதிகரித்தல்




3. கைத்தொழில் பண்ட உற்பத்தியில் ஈடுபடும் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பலர் வெளிநாடுகளுக்கு செல்லுதல்.




4. விவசாய பண்ட உற்பத்தியில் கையாளப்படும் தொழிநுட்பம் வீழ்ச்சியடைதல்






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


## 7. நிகழ்கால நுகர்வுக்கும் எதிர்கால நுகர்வுக்கும் இடையிலான வளப்பங்கீடு

ஒரு பொருளாதாரம் நிகழ்கால நுகர்வுக்காக ஒதுக்கப்படும் வளங்களின் அளவைக் குறைக்கும் போது மூலதனப் பண்டத்திற்குரிய வள ஒதுக்கீடு அதிகரிக்கும் அதனால் அப்பொருளாதாரத்தில் எதிர்கால வளர்ச்சி ஏற்படும்.

⇒ நிகழ்கால நுகர்வை சிறியளவால் இழக்கத் தயாராகவுள்ள சமூகம் எதிர்காலத்தில் குறைந்தளவான வளர்ச்சியை அனுபவிக்கும்.




⇒ நிகழ்கால நுகர்வை பெரியளவில் இழக்கத் தயாராகவுள்ள சமூகம் எதிர்காலத்தில் பெரியளவான வளர்ச்சியை அனுபவிக்கும்.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk
Copyright